இந்துசாதனம்.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரிக் கிரயம்.		
யாழ்ப்பாணப் பட்டினம்:	ஷ 1-க்கு	ரூ. 5-60
வெளியூர், இந்தியா:	,,	ரூ. 9-40
சொலோயப்பகுதி:	,,	ரூ. 9-40
தனிப்பிரதி:		சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.		
முதன் முறைக்கு:—ஒருகலம்		ரூ. 9-40
,,	அரைக்கலம்	ரூ. 5 00
,,	கால்கலம்	ரூ. 3-15
,,	ஒரு அங்குலம்	சதம் 65

அடுத்த முறைகட்கு மேல் விகிதங்களிற் பாதி. விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றி கவனிக்கப்படா.

புத்தகம்—௩௭ } யாழ்ப்பாணம்:—அக்ஷயவருஷ சித்திரைமீ ௨௦ (1926 மே 3) திங்கட்கிழமை. { இலக்கம்—அ௩.

உ
கணபதிதுணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

யாழ்ப்பாணம்
சைவபரிபாலன சபையாரால்
பிரசுரஞ் செய்யப்பெற்ற

புத்தக விளம்பரம்.

	ரூ. ச.
முதற்பாலபாடம்(சித்திரசகிதமானது)	௧௦
இரண்டாம் பாலபாடம் ,,	௧௫
மூன்றாம் பாலபாடம் ,,	௨௦
நான்காம் பாலபாடம் ,,	௩௦
ஐந்தாம் பாலபாடம்	௪௦
ஆறாம் பாலபாடம்	௫௦
கலாமஞ்சரி விளக்கத்துடன்	௭௫
கிருட்டிணன் தூது, உரையுடன்	௮௫
நமச்சிவாயமாலை, உரையுடன்....	௩
ஆத்திசூடி	௩
கொன்றைவேந்தன்	௩
வெற்றிவேற்கையுரை	௩
வாக்குண்டாமுரை	௩
நல்வழியுரை	௩
நன்னெறியுரை	௩
இனியவை நாற்பதுரை (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)....	௧௨
இலக்கண வினாவிடை....	௧௦
நிகண்டு ௧௧-வதும் ௧௨-வதும்....	௨௫
திருவாதவூரடிகள் புராண மூலம்....	௨௫
திருச்செந்தூர்ப்புராணவுரை	
௲ கிளேஸ்காகிதம்	௧-௨௫
நியூஸ்காகிதம்	௧-௦௦
கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன்.	௧௦
கந்தசஷ்டி கவசம்	௩
சுப்பிரமணியசுவாமி விருத்தம்	௩
ஆறுமுகசுவாமி விருத்தம்....	௩
பிள்ளையார்கதை	௧௨
கதிரைமலைப் பேரின்பக் காதல்	௧௨
பிரபஞ்சப் பெருமழைக்கு	௧௦
இந்துசமயி தாவரஜீவியாயிருத்த லேன்?	௧௦
சாவித்திரி சரித்திரம் (புதியபதிப்பு)	௬
குமணசரித்திரம் ,,	௬
பஞ்சரத்தினத் திருப்புகழ்....	௩
சோமவாரவிரதமான்மியம்....	௧௦
கந்தவிரதமான்மியம்	௧௦
மறைசையந்தாதி	௨௦

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்திக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்.

முற்பணமனுப்புவோர் முத்திரையனுப்பாது போஸ்றல் ஆடரேனும் மணி ஆடரேனும் முத்திரைச்செலவுஞ் சேர்த்துவண்ணார் பண்ணைத் தபாலாபீசிற் பெறக்கூடியதாக அனுப்புதல்வேண்டும் இருபத்தைந்து ரூபாவுக்குக் குறைந்த ஆடர்கள் எம்மால் வீ. பீ. யில் அனுப்பப்படமாட்டா.

சபையார் அச்சிட்ட புத்தகங்களன்றி ஏனைய புத்தகங்கள் இங்கு விலைக்குக் கிடையா.

சபையார் அச்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, ஆறுமுகநாவலர் புத்தகசாலை, S. S. சண்முகம், பிறிற்ரூனியா ஸ்ரோர், சரசுவதி புத்தக சாலை முதலிய இடங்களிலும், பருத்தித்துறை S. P. கந்தநான் சிக்கந்தரிடத்திலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப்பிள்ளை, வீ. எம் கந்தசாமி இவர்களிடமும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

இலங்கை ஆயுள் வேத வைத்திய கல்லூரி யாழ்ப்பாணம்.

நம் இலங்கைத்தீவிலே ஆயுள்வேத வைத்தியசாஸ்திரத்தை முறைப்படி பூர்த்தியாகக் கற்பிப்பதற்கு முதன் முதலாக ஸ்தாபிக்கப்பட்ட வைத்திய கல்லூரி இதுவேயாம்.

இக்கல்லூரியிற் கற்க விரும்புவோர்கள் இவ்வருடத்துக்குரிய மனுப்பத்திரங்களை வைகாசி மாசம் 20 ந் திகதிக்கு முன்னதாகவே கல்லூரித்தலைவருக் கனுப்பி வைக்க வேண்டும்.

இக் கல்லூரி வருகிற ஆனி மாசம் 1 ந் திகதி மறுபடியும் ஆரம்பமாகும்.

இதிற் கற்பவர்மூன்றுவருடப்படிப்பின் முடிவில் "ஆயுள் வேதவித்துவான்" எனக் கல்லூரியாலும் நாலுவருடப்படிப்பின் முடிவில் சர்வ இந்தியா ஆயுள் வேத வித்தியா பீத்த எனுஞ் சர்வகலாசாலையால் ஆயுள்வேத விசாறட் எனவும் பட்டம் பெறுவர்.

இந்தியாவிலுள்ள ஆயுள் வேத வித்தியா பீத்த எனுஞ் சர்வ கலாசாலையுடன் இக்கல்லூரி இணைக்கப்பட்டிருப்பதால் அச் சர்வ கலா சாலைப் பரீட்சைக்குரிய சர்வ பாடங்களும் இன்னும் அவ்விட மில்லாத சித்தர் வைத்தியமும் கற்பித்துப் பரீட்சைக்கு விடப்படுவர். இக்கல்லூரியின் வித்தியா விதிகளடங்கிய துண்டுப் புத்தகம் விரும்புவோருக்கு இனாமாக அனுப்பி வைக்கப்படும்.

இலங்கை ஆயுள் வேத வைத்தியகல்லூரி,
(M. 45.) யாழ்ப்பாணம்.

வீடுவேயும் ஓடுகளை நீங்கள் எங்கேவாங்குகிறீர்கள்?

திறமான ஓடுகளைத் தெரிவுசெய்யும்போது பிரதானமான மூன்றுவிஷயங்களை நீங்கள் கவனிக்கவேண்டும்.

முதலாவது பாரமின்மை;
இரண்டாவது நேடுங்கால உபயோகம்;
மூன்றாவது உங்கள் தேச சீதோஷ்ண ஸ்திதி.

எங்கள் ஸ்ரான்டேட் ஓடுகள்
ஸ்ரான்டேட் ஓட்டுக் கொம்பனியாரால் செய்யப்பட்டன.

மேலே சொல்லப்பட்ட மூன்று தன்மைகளும் இவைகளிடத் துள்ளன.

இப்பொழுது உலகத்திலே உண்மையாகத் திறமையான ஓடுகள்.

இவற்றை உபயோகித்தவர்கள் அதிகமாக வியந்து பேசுகிறார்கள்.

1921-ம் வருடம் நாங்கள் இந்தஓடுகளை விற்கும் உரிமையைப் பெற்றபின் உண்டான அதிக விற்பனவினால் அவற்றின் பிரஸ்தாபம் எங்கெங்கும் பரக்கின்றது.

ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்!
பலவரும் விலாசத்துக்கு எழுதவும்:

எஸ். வீரகத்திப்பிள்ளை,
விற்கும் உரிமையுடையவர்,
(H. 47.) யாழ்ப்பாணம்.

சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து.

குளிர் (தலைப்பன்) காய்ச்சல் முதலிய சகலவிதமான சுரங்களையும் டக்டர் மைக்கோயின் "சுரசங்காரி" ஒளஷதம் உடனே மாற்றிவிடும். டக்டர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது. மற்றும் வைத்தியர்களினால் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு மூன்று போத்தலை உபயோகிப்பதனால் முற்றாக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் கொண்ட மருந்தின் விலை ரூபா 1 சதம் 50. இம்மருந்து கொழும்பு கார்கில்ஸ் (Cargills Ltd.) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறற்பாலது. (Y. 47)

சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாறு, சாலாமூஸ்லி, சப்பேமூஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதமபருப்பு, சாத்தாவாரி, சீர்மூளவிகிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம, பவளபஸ்பம், வெள்ளி ஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணி பதுமம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் சீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம, கால் காதல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாபபிட்டுவதால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் ரோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦. அரைருத்தலுக்கு ரூபா ௧௦. கால் ருத்தலுக்கு ரூபா ௫ தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொலைவிசாக்கியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்ற,
மட்டுக்களப்பு,
(M. 36.) சிலோன்.

விளம்பரம்.

பாலைமரங்களும், தீராந்திகளும், முதிரை மரங்களும், தீராந்திகளும், பலகைகளும், கருங்காலி மரங்களும் பனைமரங்களும், சிலாகைகளும் தேவைக்குத் தக்கபடி விற்பனைக்கிருக்கின்றது. ஆடர்களுக்கும் கொடுக்கப்படும்.

யாழ்ப்பாணம், ச. கந்தையாபிள்ளை,
17—12—25. உடையமன் ரோட்டு,
(Y. 49) நல்லூர்.

பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.

சிவஞானசித்தியார் சுபக்கம் மூலமும் பொழிப்புரையும்.

இரண்டாம் பதிப்பு.

முதற்பதிப்பு 360 பக்கந்தான். இப்பதிப்பு 180 பக்கம் அதிகமாகச் சேர்த்து 540 பக்கத்தில் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு முழுக் கலிக்கோ பைண்டு அழகாகச் செய்யப் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு செய்யுளுக்குள்ள குறிப்புக்களும், அனுமானக் குற்றம் அறுபத்தைந்தும், பாதிவிருத்தமிதுவென்பதும் இனிது விளக்கப்பெற்றிருக்கின்றன. தத்துவப்படம் தாத்துவிகப்படம் அத்துவப்படங்களும், பல அகராதிகளும் உள்ளன. அதிகப் பிரதிகள் அச்சிடவில்லை. வேண்டுவோர் நம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். விலை ரூ 2.8-0.

சிவஞானபோதச்சிற்றுரைவிளக்கம்	3—8—0
சருவஞானோத்தராகமம்ஞானபாதம் தமிழ்மூலமும்மூத்திரத்தின விருத்தியுரையும்	1—8—0
தசகாரிய விளக்கம்	0—8—0

தபாற் செலவு வேறு.

பொ. முத்தையபிள்ளை,
சிவாகமசங்கம்,
நகரச்சிவன்கோவில்,
(Q. 70) தேவகோட்டை.

அந்தத் தலைவலி வேலையைக் கெடுக்கவா?

அதற்குச் சிறந்த உலகிற் பிரசித்தி பெற்ற மருந்து

லிட்டில்ஸ்
ஓரியன்டல் பாம்.

இப்போதே ஒரு புட்டி வாங்கிக்கொள்ளுக.

(1 26)



(Y .51.A.)

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் அகஷயஷ
சித்திரைமீ உகஉ திங்கட்கிழமை.

பள்ளிக்கூடச்சிறுமியர் நாடகம் நடித்தல்-2.

ஐயையோ, முடத்தனமும் அகங்காரமும் இவ்வளவு முற்றிவிட்டனவா! பெண்களுள்ளே நாட்டியஞ் செய்பவர்களாகிய நடனஸ்திரீகள் பரத்தையரென்று அவமதிக்கப்பட்டு இல்லறத்திற்குரிய கற்புடைய மகளிராலும் மற்றும் அறிவுடையோராலும் ஒதுக்கப்படுகின்றனர். அந்தப் பரத்தையருள்ளும் யாராயினும் நாடகமேடையிலேறி ஆடவரோடு கூத்தாடுவரேல் அவர்கள் கூத்தாடிப்பெண்களென்று அப்பரத்தையராலும் அவமதிக்கப்படுகின்றனரே! இங்ஙனம் பெரிதும் அவமதிக்கப்படுங் கூத்தாடும்பெண்கள் செய்யும் செயலை உயர்குடிப்பிறந்த கன்னிகாரத்தினங்களுஞ் செய்யும்படி தூண்டிவிடுதல் பள்ளிக்கூட அதிகாரிகள் ஆசிரியர்களென்றிருப்பவர்கட்கு அடுக்குமா? கூத்தாடும் பெண்களுள்ளும் பலர் பெண்வேஷம் பூண்டு கூத்தாடுவரேயன்றி ஆண்வேடந்தரித்துக் கூத்தாட உடன்படார்களாமே! அங்ஙனமிருப்ப நமது பள்ளிக்கூடக் கன்னிகாரத்தினங்கள் சிறிதும் இலச்சையின்றி ஆண்வேடந் தரித்துக்கொண்டு ஆயிரக்கணக்கான வாலிபர் இவள் பெண்ணா இன்றேல் உண்மையாக ஆண்தானா என்று சந்தேகமுறும்படி வந்துநின்று, ஆணும்பிறந்தவர்களும் அஞ்சும்படி அதிக திறமையோடு நடிக்கின்றார்களே! ஒரு கன்னிகை ஒரு வாலிபனாக வேஷமிடும்போது எத்துணை வசதியினங்கள் ஏற்படும்! இங்ஙனம் ஆண்வேடந் தரிக்கும்போது பெண்களுக்குரிய மடம் அச்சம் நாணம் பயிர்ப்பென்னும் நாற்குணங்களும் கிழக்குத் தேற்கு மேற்கு வடக்கு என்னும் நாற்றிசை ளாலும் பறந்துவிடுமே!

வேலியானது பயிரை மேய நினைத்தவாறு, தமிழ் மாதர்கட்குரிய கல்வியையும் புராதன சீர்திருத்தங்களையும் விருத்திசெய்தற்கென ஸ்தாபிக்கப்பட்ட சைவப் பெண்கள் விடுதிப் பாடசாலைகளிலேயே, முதன்முதற் சிறுமியர் நாடகம் நடித்தலாகிய இத்தீத்தோழில் ஆரம்பிக்கப்பட்டது. இச்சிறுமியர் சமயசம்பந்தமான நாடகங்களையும் நீதியைப் புகட்டுதற்குரிய நாடகங்களையுந்தானே நடித்தார்களல்லாமல் காதலைப் பயக்கும் ஆங்கில நாடகங்களோன்றையும் நடிக்கவில்லையேயெனச் சிலர் சமாதானஞ் சொல்ல முயலுதல் கூடும். அப்படியன்று; குடிகுலத்திற் பிறந்த பெண்கள் - அவர்களுள்ளுங் கன்னியர் நாடகம் நடிக்கவொண்ணாதென்பதே நியதி. நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றமே குற்றம் என்றபிரகாரம், செய்யப்பட்டது குற்றமானால் அது எவர்செய்தாலுங் குற்றமேயாம். தாம்வசிக்கும் வீட்டின் முற்புறத்திற்குத்தானும்,வரும் வழக்கமில்லாத் தமிழ்க் கன்னிசையர்களையா, கூத்துப் பார்ப்பதும் குற்றமென்ற கொள்கையுடைய தமிழ்த் தாயர் பெற்ற இரத்தினங்களையா, விவாககாலத்திலே தாதியர் தாங்கப் பூமியைப் பார்த்துக்கொண்டு அடிமேல் அடி வைத்துக் கொடியேன வோசிந்து நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் நாற்குணங்களின் பயனாகச் சரீரம் முழுவதும் வியர்வையரும்ப மணவறையைச் சுற்றிவந்து, தாஞ் செய்யவேண்டிய கிரியைகளனைத்தையும் செய்யாது பிரமித்துச் சித்திரப்பாவை போல் வாளாநிற்ப, தாதியரே சூத்திரப் பாவையை இயக்குமாபோல அவர்களுள் கை முதலிய அவயவங்களை இயக்க மணக்கிரியையை ஒருவாறு செய்யும் கன்னியர்களையா நாடக மேடையிற் சென்று கூத்தாடச்செய்வது! இவற்றையெல்லாஞ் சிந்தியாது சைவவிடுதிப் பெண்பாடசாலைச் சிறுமியர் நாடகம் நடிக்க, எப்பொழுது சமையம் வாய்க்குமென எதிர்பார்த்திருந்த அந்நிய சமய வித்தியாசாலை அதிகாரிகளும் தங்கள் விடுதிப் பெண்பாடசாலைகளிற் கல்விபயிலும் நஞ்சிறுமியரை ஆங்கிலத்திலும் தமிழிலும் நாடகம் நடிக்கச்செய்தனர். கன்னியர்களெல்லாருங் கூத்தாட, வாலிபர்கள் அதனைப் பார்த்து மெச்சுவதென்றால் காலசதியில் இந்த யாழ்ப்பாணம் பிரான்ஸ் தேசம்போலல்லவா மாறிவிடும்! குளிக்கப் போய்ச் சேறு பூசினாற்போல நஞ்சிறுமியர் படிக்கப் போய் எடுத்த பயன் இதுதானா! இக்கன்னியர் நாடகம் நடிக்கத் தலைப்பட்ட நோக்கமென்ன? ஊரைச் சீர்திருத்தவா? இன்றேல் தாங்கள் சீர்திருந்திக்கொள்ளவா? இன்றேல் பிற்கால இல்லற வாழ்க்கைக்கு இந்த நாடக நடிப்பு ஆவசியகம் இவர்களுக்கு வேண்டியிருக்கின்றதா?

அருந்ததி, நாளாயினி, அநசூயை, தமயந்தி, ஜாநகி, சந்திரவதி, சாவித்திரி, பத்மினி யெனப்படும் பதிவிரதைகளின் வழித்தோன்றல்களாகவுள்ள எங்கள் சிறுமியர்கள் உலக்கை தேய்ந்து உளிப்பிடியானவாறு, இத்துணைக் கீழான நிலைமைக்கு இறங்குதலாகுமா! "செழும்பொழில்வாய் வேம்பன்றோ காக்கை விரும்புங் கனி" யென்றபிரகாரம், ஷேய்க்ஸ்பியர் நாடகத்திலுள்ள அடங்காமாரியாகிய கதறியின் என்பவளுடைய கதையைப் படித்து மெச்சும் எங்கள் சிறுமியர் தங்கள் மூதாட்டியர்களாகிய மேலே சொல்லப்பட்ட பதிவிரதைகளைப்பற்றி யாதாயினு மறிவார்களா? இந்த உத்தமிகளின் திவ்விய சரித்திரங்களை நம் சிறுமியருக்குப் பயிற்றுதல்வேண்டுமென்று இச்சிறுமியரின் பெற்றாராயினும் உபாத்தியாயர்களாயினும் எக்காலத்திலேனும் நினைத்ததுண்டா? இதனால் நஞ்சிறுமியர் அடங்காமாரியாகிய கதறியினிலும் தாங்கள் விசேஷமென்று நினைக்கின்றார்களேயன்றி எங்கள் பழைய கற்பினுக்கரசிகளின் காலிற் பொருந்திய தூசுக்கும் தாம் சமானமல்லவேயென்பதை அறிய முடியாதவர்களாயிருக்கின்றார்களே. நளவெண்பாவெனப்படுஞ் சிறந்த நூலிலே தமயந்தியைப்பற்றிச் சொல்லுமிடத்து:

"நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா, ஆர்க்குஞ் சிலம்பேயணிமுரசா-வேற்படையும், வாளுமே கண்ணா வெதாமரித் துடைக்கீழ், ஆளுமே பெண்மை யரசு." என்றல்லவா சொல்லப்பட்டிருக்கின்றது.

மடம் நாணம் அச்சம் பயிர்ப்பு சொல்லப்படும் நாற்குணங்களும், எங்கள் சிறுமியர் கூத்தாடப் புறப்படின் அவர்களை விட்டு அகன்றுவிடுமென டக்டர் தம்பையா அவர்கள் பெரிதும் பயப்படுகின்றாரே! அங்கிலம் படிக்கத் தலைப்பட்ட நஞ்சிறுமியரிடத்து இந்த நாற்குணங்களும் முந்தியே இருந்தாலன்றோ கூத்தாடப் புறப்பட்டபின் அவை இச்சிறுமியை விட்டு அகலுதல் முடியும்! "என்னைக் கலியாணஞ் செய்துகொள், என்னை மணந்துகொள், நான் உன்மீது ஆசைகொண்டேன்" என்று வாய் கூசாது ஷேய்க்ஸ்பியர் நாடகம் நடிக்கும்போது சொல்லும் சிறுமியரிடத்து இந்த நான்கு குணங்களில் யாதாயினும் ஒன்று இருக்கக்கூடுமென்று காத்திருத்தல் குளத்துக்குள் நெருப்புத்தணல் இருக்கின்றதென்று சொல்லுவது போல் அசம்பாவிதமல்லவா!

கேம்பிறிஜ் சர்வகலாசங்கப் பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பட்ட ஷேய்க்ஸ்பியர் நாடகங்களைப் படிக்கலாம் நடிக்கவோண்ணாவேனச் சில விடுதிப் பெண்பாடசாலை ஆசிரியர் ஆட்சேபந் செய்கின்றார்கள். படிப்பன எல்லாவற்றையும் நடித்துக்காட்டல் முடியுமா! நெருப்பைக் கையினாலே தீண்டினால் அது சுடும் என்று படிக்கலாம்; ஆனால், அதனை நடித்துக் காட்டும்படி நெருப்பைக் கையினாலே தீண்டினாற் சுடுந்தானே. இப்படியிருப்ப, படிப்பதற்கும் நடிப்பதற்கும் பேதமில்லையென்றுசொல்லுதல் முடியுமா!

கன்னிகையர்களாயுள்ள மாணாக்கர்களை நாடகம் நடிக்கும்படி தூண்டிவிடும் உபாத்திமைப்பெண்கள் தாங்கள் இப்படி வேடம் பூண்டு நாடக மேடையில் வந்து நடிப்பார்களா? இந்த உபாத்திமைப் பெண்கள் யாராயினும் விவாகஞ் செய்தவர்களிருந்தால் இப்பெண்கள் தாம் அங்ஙனம் நாடகம் நடிக்க உடன்பட்டாலும் இவர்களுடைய நாயகனாயுள்ளார் இவர்களை அங்ஙனஞ்செய்ய விடுவார்களா! ஒருபோதும் விடமாட்டார்களே. அங்ஙனமாயின் தமக்கொருநியாயம் பிறர்க்கொரு நியாயம் என்பது சரியல்லவே! சாதியபிமானமற்ற தமிழர்களாகிய எங்களிடத்தே இப்பொழுது இந்தக் கேடுகெட்ட நவீன வழக்கம் உறபத்தியாகவிருக்கின்றதே யன்றி, இந்த இலங்கையிலுள்ள சகோதரர்களாகிய சிங்களருக்கிடையே இந்த அபூர்வமான கொள்கையைக் காணோமே! இன்றேல் இந்திய பள்ளிக்கூடச் சிறுமியர் இங்ஙனம் கூத்தாடுவதாகவும் அவர்களுடைய ஆசிரியர்கள் அவர்களைக் கூத்தாட்டுவதாகவும் நாங்கள் இதுகாறுங் கேள்விப்படவில்லையே!

'நன்னெறியாவது நமச்சிவாயவே'

மந்திரங்கள் எல்லாவற்றிலும் சிறந்ததும், வேண்டியவற்றையெல்லாம் தப்பாது கொடுப்பதும், ஈற்றிலும் கயிலையேற்றுவதும் ஸ்ரீ பஞ்சாட்சரமேயாம். சைவசமயிகளாயுள்ளோர் ஏழாவது வயதிலே சமயதீட்சை பெறவேண்டுமெனச் சமயநூல்கள் வற்புறுத்துகின்றன. இவ்வைந்தெழுத்தின் பெருமையை எவரும் அளவிடுதல் அரிது. எமது சமயகுரவராகிய திருநாவுக்கரசுநாயனார் "கற்றுணைப் பூட்டியோர் கடலுட்பாய்ச்சினும், நற்றுணையாவது நமச்சிவாயவே" என்றும், "நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே" என்றும், "பண்ணிய வுலகினிற் பயின்றபாவத்தை நண்ணிநின் றறுப்பது நமச்சிவாயவே" என்றும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் "ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பது, வேதநான்கினும் மெய்ப்பொருளாவது, நாதனாம நமச்சிவாயவே" என்றும் திருவாய்மலர்ந்தருளினார். இன்னமும், சுந்தரமூர்த்திநாயனார் வெள்ளையானைமீது ஆரோகணித்து வடகயிலை செல்வதைக்கண்ட சேரமான்பெருமானாயனார் மனஞ்சகியாராகித் தாம் இவர்ந்துசென்ற குதிரையின் செவியிற் ஸ்ரீ பஞ்சாட்சரத்தைஉபதேசித்தவுடன் வயப்புரவி ஆகாயமார்க்கமாக எழுந்து வெள்ளையானையை முற்பட்டுச்சென்றமையும் பிறவும் ஐந்தெழுத்தின் பெருமையை ஒருவாறு உணர்த்தாநின்றன.

நான்குவேதங்களுந் தனித்தனிபுகழ்ந்து போற்றுவதும் இமமகா மந்திரத்தையேயாம். மோட்சமாகிய விளைவைக் கொடுப்பதாகிய ஸ்ரீபஞ்சாட்சரம் என்னும் விதையை மனமென்றும் நிலத்தில் விதைப்போர்க்குத் "தருப்பை சுட்டிடும் வேள்வியேன் தானமேன் தவமேன்" என நூல்கள் கூறும். இதன் அருமையையும்பெருமையையும்விளக்கும் சரிதைகள் அளப்பில. அவற்றுள் ஒன்று வருமாறு.:—

பாண்டிநாட்டை அரசு புரிந்த மன்னருள் தசாருகன் என்பான் ஒருவனுளன். சோமசுந்தரப்பெருமானுடைய திருவருளையே துணையாகக் கொண்டு வழிவழி அரசு புரிந்து வந்த குலத்தில் அவதரித்த இம்மன்னன் பூர்வ புண்ணியக்குறைவினாலே உரியபருவமெய்தியும் ஸ்ரீ பஞ்சாட்சர உபதேசம்பெறாது பல்லாண்டு கழித்தான். உரியபருவம் எய்துதலும் அரசன் ஓர் கன்னிகையை விதிப்படி விவாகம் செய்து அவளைத் தீண்டினான். அக்கன்னிகையின் தேகத்திலிருந்து அதிக வெப்பமுண்டாகி அரசனைப்பெரிதும் வாட்டியது. மணமகனாகிய அரசன் தரித்துள்ள சந்தனக்குளம்புபொரிந்து உதிர்ந்தது; அந்தி வெடிமுல்லை மாலை கருகியது; விலை யுயர்ந்த முத்துமாலை நீறாகியது. அரசன் அதிகதிகிலுற்று "ஆரணங்கே உனது சரீரத்திலிருந்து எழுந்த தீயானது சுட என் உடம்பு வெந்துவிட்டது. இதன் காரணம் யாது?" என்றான்.

ஸ்ரீ பஞ்சாட்சரத்தை விதிப்படி உபதேசிக்கப்பெற்று நாத்தழும்பேறச் செபித்துவருபவளாதலினால் அக்கன்னிகை விஷயம் முழுவதையும் அறிந்தவளாய்க் கணவனுடைய முகத்தைப் பார்த்துச் சிரித்து, "ஸ்ரீராணநாதா முனிசிரேஷ்டராகிய துருவாசரிஷி தமது பூரண கிருபாகடாட்சத்துடன் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை, பலவருடங்களுக்குமுன் எனக்கு உபதேசித்தருளினார். அதனை அடியாள் விதிப்படி செபித்துவருதலினால் எனது வினைகள் நீங்கின; சரீரம் சுத்தமாயது. பாவம் புண்ணியத்தை வெல்வாதென்பது சரதம். அது போல, பேரின்பவாழ்வைத் தப்பாது கொடுக்கவல்ல ஸ்ரீ பஞ்சாட்சரத்தை உரிய காலத்தில் உபதேசிக்கப்பெறாத, அதன் மகிமையைச் சிறிதும் அறியாத தாங்கள் அம்மகாமந்திரத்தினாற் பரிசுத்தமடைந்துள்ள எனது சரீரத்தைத் தீண்டுதல்தகாது. ஆகவேசென்றுபோனதை நினைந்துவருந்துவதினால் ஆம்பயன்யாதுமில்லை. இனிமேற் சிறிதும் காலதாமதமின்றிப் பஞ்சாட்சர உபதேசம் பெற்றுவருகுதிர்" எனக் கூறினள்.

மணமகளுடைய சரீரத்திலிருந்து எழுந்தவெப்பமும் அதனாற்றனது உடலம் வெந்தமையும் அரசிகூறியவிஷயங்களும் தசாருகனுடைய உள்ளத்தைப் பேதித்தன. அரசன் சிறிதும் சிந்தியாதவனாய்ப் "பெண்ணே! நீயே இப்பொழுது எனக்குச் ஸ்ரீ பஞ்சாட்சர உபதேசம் செய்தல் வேண்டும்" என்றான். இதனைக்கேட்ட அரசி "கணவன் நாயகியிடம் உபதேசம் பெறுதல் முறையாகாது. சிவானுபூதிச் செல்வராகிய கர்க்கமுனிவர் ஒருவர் அதிசமீபத்திலே ஓர் பர்ணசாலையிலிருக்கின்றார். அவரிடம் செல்வோம் வருதிர்" எனக்கூறினள். அரசனும் அரசியும் முனிவரிடம் சென்று அவரது பாதங்களைப் பணிதலும் அவர் அவர்களுக்கு ஆசிபுகன்றார். அரசன் தன்னிடத்துள்ள பெருங்குறையை முறையிட்டுத் தனக்குச் ஸ்ரீ பஞ்சாட்சர உபதேசம் செய்தருளும்வண்ணம் பிரார்த்தித்தான். முனிவர் அவனுடையபக்குவநிலையை உணர்ந்து அவனது செவியில் ஐந்தெழுத்தை உபதேசித்தருளினார். அப்பொழுது அவனிடத்துள்ள தீவினைகளெல்லாம் நூறுகோடி காக்கை யுருவெடுத்து மயிர்த்துவாரங்கள் வழியாகப் புறப்பட்டு ஆகாயத்திற்பறந்து கரிந்தன. இதனைக் கண்ட அரசன் கர்க்க முனிவரைப்பணிந்து இங்ஙனம் நிகழ்ந்தமைக்குக் காரணம்யாதெனக் கேட்டான். முனிவர் விஷயம் முழுவதையும் விரித்துரைத்தபின் இவையெல்லாம் ஸ்ரீ பஞ்சாட்சரத்தினாலாய பலனெனக்கூறி, "நீயுன் மனைவியுடன் நகரத்துக்குச் சென்று இல்லாச்சிரமத்தை நடத்தி, ஈற்றில் இம் மந்திரபலத்தாற்பெறுதற்குரிய சிவபிரானது திருவடி நீழலையும் அடைகுதி" எனவிளம்பி விடைகொடுத்தனுப்பினார். அரசன் அங்ஙனமே சென்று பல்லாண்டு வாழ்ந்து மனைவியுடன் பேரானந்தப் பெரும் பேற்றைப் பெற்றான்.

எமது சமயநூல்களும் சமயாசாரியரும் பேரிளரும் பிறரும் ஸ்ரீ பஞ்சாட்சர மகத்துவத்தை இங்ஙனமெல்லாம் விதந்து போற்றிப் புகழ, இக்காலத்துள்ள நம்மவருள் அநேகர் சமயதீட்சைதானும் பெறமனங்கொள்ளாது சஞ்சாரப் பிணங்களாய் வீணே காலம் கழிக்கின்றனர். தேகமும் பிறவும் மின்னலைப்போன்றன. சிவபரஞ்சுடரே எங்கும் நிறைந்த எல்லாம்வல்ல எல்லாமானபரம்பொருள். என்றுமுள்ளதும் அதுவே. சமயநூல்கள் அதன் தடத்தலக்கணங்களையும் அதனை நாம் சென்றடையும்வழிகளையும் நன்குவிளக்கிப் போதிக்கின்றன. அப்போதனைகள்பொன்போன்றுள்ளன. சைவ சமயிகளாயுள்ளார் உரியகாலத்திலே சமயதீட்சை பெறவேண்டுமென்பதே முதலாவதான போதனையாகும். இதனைப்பெறுதார் சைவசமயிகளல்லர். இவர்களுக்குச் சைவக்கிரியைகள் இல்லை. இவர்கள் சமயவிதிப்படி விவாகம்செய்தற்கு உரியராகார். இவர்கள் இறந்தபின்னரும் அந்தியேஷ்டி முதலான மரணக்கிரியைகளும் இவர்களுக்குச் செய்யவொண்ணாதாம். சமயதீட்சைபெற்றோருள்ளும் அதிபாதகமாகிய புலாலை உண்போர்க்கு யாதும் சமயக்கிரியை இல்லையாம். இவர்கள் ஆலயத்தினுட் பிரவேசித்தலும் பரிசுத்தமுள்ள பிரஸ்தானங்களுட் புகுதலும் அதிபாதகமாகும். எமது சமயகுருமார் இவற்றைச் சிறிதும் சிந்திப்பதில்லை. பணம் கொடுக்கும் எவர்களாயினும் அவர்களுக்கு எக்கிரியையும் சிறிதும் கூசாது செய்யமுற்படுவர். சமயதீட்சை இந்நிலை அடைந்தமைக்குச் சமயகுருமாரே விசேடகாரணராவர். "சமயதீட்சைபெறுதவர்களுக்கு யாதும் கிரியை செய்வதற்கு விதியில்லை. விவாக விஷயமாயின் காந்தருவமுறையைக் கைக்கொள்ளுங்கள். மரணக்கிரியையாயின் இறந்தமாடு ஆடுகளைப் புதைப்பதுபோல நீங்களும் நிலத்திற் புதைத்து விடுங்கள். உங்களுடைய ஒழுக்கத்துக்கு இதுவே தக்க முறை. எங்கள் சமயசாஸ்திரத்தில் உங்களுக்கு விதியில்லை" என்று சமயகுருமார் அச்சுறுத்துவாராயின்சமயதீட்சை இந்நிலை எய்தியிராது. சமயகுருமார் இவ்விஷயத்தைச் சிறிது சிந்திப்பார்களாக; சமயம் நன்னிலையெய்தவழிகாட்டுவார்களாக. நாம் கருணையங் கடலாகிய சயிலயபதியின் திருவடியை அடைதற்குரியதாகிய "பவனென்னும் நாமம் பிடித்துத் திரிந்து பன்னாளழைத்தால், இவனெனைப் பன்னாளழைப்பொழியானென்றெதிர்ப் படுமே." எனத் திருநாவுக்கரசுநாயனார் திருவாய்மலர்ந்தருளினர்.

திருநாவுக்கரசு நாயனார் குருபூசை.

சமண்முதலாம் பரசமய ஒளிமழுங்கவும் சமயங்கட்கெல்லாம் தலைசிறந்து விளங்கும் சைவசமயம் தழைத்தோங்கவும் திருவவதாரம் செய்து, வேறுபட்ட சமணருடன் மாறுபட்டு வாதம்செய்த விடத்துக் கற்றூணையைக்கொண்டு கடலைக்கடந்தும், நீற்றறையை ஈசன் எந்தை இணையடி நீழலாக்கியும், கொடிய விடத்தை அமுதமாக்கியும், இன்னனபிறபுரித்தும் "சைவசமயமே சமயம்" என மலைமேலேற்றிய தீபம்போல நிலை நிறுத்தியருளிய எமது சமயாசாரியராகிய திருநாவுக்கரசுநாயனார் திருப்பூம்புகலூரிலே சிவசாயுச்சியம் எய்திய சுபதினம் இந்நமாதம் 21-ம் திகதி (6-5-26) வியாழக்கிழமையாகும். தாசமார்க்கம் புத்திர மார்க்கம் சகமார்க்கம் சன்மார்க்க மென்னும் நான்கனுள் தாசமார்க்கத்தைக் கடைப்பிடித்துக்கடைத்தேறியவர் இவ்வாகிசப்பெருந்தகையாராவர். இந்நாயனார் ஆன்மநாதராகிய கயிலாயபதிக்கு மீளா அடிமையாகி ஆண்டான் அடிமைத்தன்மை இத்தகையதென்பதையும் அதனைச் சிரமேற்கொண்டு

ஒழுகும் முறையையும் உலகுய்யும் வண்ணம் தமது அதிமதுர ஒத்த செந்தமிழாலாய தேவாரத் திருப்பதிகங்களால் விளக்கியருளினர். ஆன்ம ஈடேற்றத்தின்பொருட்டு அதி உத்தமமார்க்கத்தை வகுத்தருளிய இந்நாயனார் சிவசாயுச்சியம் எய்திய தினத்தை நாம் எல்லோரும் அதிசிரத்தையோடும் போர வலுடனும் கொண்டாடுதல் வேண்டும். சிவலாயங்கள்தோறும் விசேட அபிடேகம் பூசை உற்சவம் முதலியன நடைபெறச்செய்தல்வேண்டும். வித்தியாலங்கள் திருமடங்கள் முதலான இடங்களிலெல்லாம் இப் புண்ணியதினம் அன்புடன் கொண்டாடப் படவேண்டும். மேற்கூறிய ஸ்தானங்களிலும் கூடுமாயின் இல்லங்கள்தோறும் ஷை- நாயனாருடைய குருபூசையை நடாத்துதல் கடனும். அன்பர்கள் எல்லோரும் இத் திருத்தொண்டில் ஈடுபட்டழைத்துத் தமக்கும்உலகுக்கும்பெரும்பயன்விளைப்பார்களாக திருநாவுக்கரசுநாயனாரின் திவ்விய சரித்திரப் பிரசங்கம் சைவ மணங்கமழும் எவ்வெவ் விடங்களிலும் நடைபெறச்செய்தல் சைவ நன்மக்களின் பெருங்கடனும்.

கால நிலை.

இன்று இங்கே சிறிது மழை தூறியது. இப்பொழுதும் மழைக்கோலங்காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்திற் சிற்சில ஊர்களில் மழைபெய்ததென அறியலானேம். பொக்களப்பன் சின்னமுத்து முதலிய நோய்கள் இடைவிடையே காணப்படுகின்றன. பேதிநோயாற் புதிதாகப்பீடிக்கப்பட்டார் யாருமில்லையாம். சோனகதெருவில் நேர்ந்த சடுதிமரணம்படுவனென்னும் நோயன்றிப் பேதிநோயல்லவாகும்.

இணுவில் பராசசேகரப்பிள்ளையார்கோவில்

இவ்வாலயத்தில் நிகழும் சித்திரைமீ 23உ புதன்கிழமை (5-5-26) துவதசாரோகணமாகி வைகாசிமீ 1உ வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும 2உ சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் மிகச் சிறப்பாக நடைபெறும்.

சச்சிதானந்தராசயோகிகள் சற்பிரசங்கம்.

சிற்சபா நடராசமூர்த்திக்கு வருஷத்தில் நடக்கும் ஆறு அபிடேகதினங்களுள் ஒன்றாகிய சித்திரைத் திருவோண நக்ஷத்திர தினமாகிய நாளை இரவு ஏழுமணிதொடக்கம் இந்துக்கல்லூரிமண்டபத்திலே சச்சிதாநந்தராசயோகிகள், பரமாசாரியர் மாணிக்கவாசகசுவாமிகளுக்கு உபதேசம் செய்தருளியசரித்திரத்தின்பிற்பாகத்தைப் பக்கவாத்திய சகிதமாகப்பிரசங்கஞ் செய்வார்கள். இந்தமீ 24உ (6-5-26) வியாழக்கிழமை இரவு எஞ்சியபாகம் பிரசங்கம் செய்யப்படும்

சைவப்பிரசங்கம்.

குமாரபுரக் குகனடியார் கூட்டத்தின் ஆதரவின்கீழ் இந்தமீ 13உ (25-4-26) ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் ஆறு மணிவரையில் மூலைத்தீவு வீரகத்திப் பிள்ளையார்கோவிலில் மண்டபத்தில் ஸ்ரீ அ. கனகசபாபதி (காணிப்பதிவுகந்தோர்த் தலைவர்) அவர்களால் "ஆலயந்தொழுவது சாலவுநன்று" என்னும் வாக்கியத்தைப் பீடிகையாகக்கொண்ட ஓர் அரிய உபந்நியாசம் செய்யப்பட்டது. ஸ்ரீ சி. சபாபதிப்பிள்ளை (தபாற்கந்தோர்த்தலைவர்) ஸ்ரீ பொன்னையா (உபாத்தியாயர்) ஸ்ரீ சந்திரசேகரம்பிள்ளை (காணிப்பதிவுகந்தோர்ப் பரிசோதகர்) அக்கிராசனர் என்னும் இவர்களாற் குறிப்புரைகள் கூறப்பட்டன. இரவு ஒன்பது மணிவரையிற் தேவாரபாராயணத்தோடு கூட்டம் சமாப்தியாயிற்று.

கடித.

மிருகம் அகப்படாமையினால் நாயையும் மனிதனையும் சுட்டமை.

சென்ற ஏப்பிரல் மாதம் 25-க் திகதி சிலாபத்துக்குச் சமீபமாயுள்ள பத்துலுஓயா என்னும் கிராமத்திலே ஜேம்ஸ்பெரிறா என்னும் ஒருவன் வேறும் இருவருடன் வேட்டையாடப் புறப்பட்டு அதிகநேரம் திரிந்தும் யாதும் அகப்படாமையினால் மனவருத்தத்துடன் வீட்டுக்குத் திரும்பினான். வீட்டைச்சமீபிக்கும்போது அயலிலுள்ள நாய் ஒன்று பெறாறு என்பவனுடைய காலிற் கடித்தது. இதனால் அவன் அதிககோபங்கொண்டு நாயைச்சுட்டான். சன்னம் நாயினுடைய வயிற்றை ஊடுருவிச்சென்று அன்டிரின் அப்பு என்பவனைத்தாக்கியது. சிறிதுகாயம் ஏற்பட்டது. குறித்த எதிரிமீது சிலாபப் பொலிஸ்கோட்டிலே வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றது.

போலந்து இந்தியாமீது கொண்ட அநுதாபம்.

ஐரோப்பாவில் போலந்து நாட்டிலுள்ள ஓ- அறிஞர் மகாத்மா காந்திக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்திலே இத்தியாவில் உற்பத்தியாகும் கதரைத் எமக்கு அனுப்பினால், தாம் அதனைத் தமது நாட்டிலே விற்றுக் கொடுத்து இந்தியாவின் மீது தமது நாட்டாருக்குள்ள அநுதாபத்தைக் காட்டுமாறு செய்ய முயல்வதாகக் கூறியிருக்கிறார். தமது நாட்டுத் துணிகளை விடக் கதர் சிறிது விலை மேறி விருந்தாலும் வீடு வீடாய்ச் சென்று கதரை விற்றுப்பணம் அனுப்புவதாக அவர் கூறுகிறார். நமது நாட்டு பெரியோர்களுக்குக் கதரிலே விருப்பம் இல்லை என்று லோகோபகாரி கூறுகின்றது.

பெண்ணின் வீரச்செயல்.

வங்காளத்திற் சில மாதங்களுக்கு முன் டக்காவை அடுத்த மீர் பூரில் ஒரு வீட்டில் திருடர்கள் புகுந்தனர். அப்பொழுது ஹேமள காமினி என்ற ஒரு மாதும் அவளது மூன்று சகோதரர்களும் ஜகதீசன் என்ற மாணவனும் சேர்ந்து திருடர்களைக் கலைத்து ஓட்டி விட்டார்கள். ஹேமளா என்ற மாதே இதில் தலைமையாக நின்றாள். அவள் ஊக்கத்தாலேயே மற்ற ஆண்கள் துணிவுகொண்டுநின்றனர். இதற்காக அந்த வீரமாதுக்கு அதிகாரிகள் 300 ரூபாய் வெகுமதியாக அளித்தனர்; மற்றவர்களுக்கு 150 ரூபாய் விகிதம் கொடுத்தனர்.

நல்ல யோசனை.

இந்திய புதிய ராஜப் பிரதிநிதி சில தினங்களுக்கு முன் டேராடூனில் இருக்கையில் மாறுவேடம் பூண்டு சில கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள விவசாய நிலையையும், பள்ளிக்கூடம், வைத்தியசாலை, தானா இவற்றின் நிலையையும் பார்வையிட்டாராம். இது நன்று. சென்னையிலும், பின் வங்காளத்திலும் கவர்னராயிருந்த சார்மிக்கேல் பிரபு இவ்வாறு மாறுவேடம் பூண்டு மக்கள் நிலையை அறிந்து வந்த சம்பவங்கள் பல. அந்தக் காலத்தில் கலெக்டர்கள் கூட மாறுவேடம் பூண்டு மக்கள் நிலையை அறிந்து வந்த கதைகள் பல. ஆனால் பிற்காலத்தில் பெரிய அதிகாரிகள் தங்கள் பரிவாரதேவதைகள் கூறுவதையே வேதவாக்காகக் கொண்டு அரசு நடத்தத் தொடங்கிவிட்டனர். இந்த நாட்டின் நிலையை ஈர்வின் பிரபு உண்மையாக அறியவேண்டுமானால் அவர் அதிகார ஆடம்பரங்களினின்று நீங்கிச் சாதாரண மனிதர் போல ஏழை மக்களிடம் உலாவவேண்டும்.

லோகோபகாரி

மதுபரிபாலனப்பகுதிச்சேவகர்க கொலையுண்டமை.

முறட்டுக்குச் சமீபமாயுள்ள கெல்லீவா என்னுமிடத்திலே சோரமாகச் சாராயம் விற்கப்படுவதை அறிந்த மதுபரிபாலனப் பகுதிப்பரிசோதகராகிய மிஸ்ரர் விஜயசிங்கி என்பவரும் இரு சேவகரும் உளவுகாரன் ஒருவனும் சென்ற புதன்கிழமை இரவு அங்குச்சென்று குறித்த வீட்டில் வைக்கப்பட்டிருந்த சாராயம் அளவுபோதல் முதலியவற்றை எடுத்தபின், பரிசோதகர் அங்குள்ள வாடி வீட்டுக்கும் ஏனையோர் தேய்ரீக்கடைக்கும் உணவருந்தும்படி போயினர். சிறிதுவேளையில் தேய்ரீக்கடை வாயிலிலே ஓர் வண்டி வந்து நின்றது. நால்வர் வண்டிக்குள்ளிருந்து புறப்படுக் கடைக்குட் புகுந்தார்கள். அவர்கள் 30 வயதுள்ள யோன் சிங்கோ என்னும் மதுபரிபாலனப் பகுதிச் சேவகனைப் படுகாயமுறக் குற்றினார்கள். சேவகன் உடனே வீழ்ந்து இறந்தான். உளவுகாரனாகிய மாட்டின் அப்பு என்பவன் படுகாயமுற்று வைத்திசாலைக்குக் கொண்டுபோகப்படும் வழியில் உயிர் துறந்தான். யோன்பெறரு என்னும் சேவகன் கடுங்காயமுற்று ஆபத்தான நிலையிற் கிடக்கின்றனன்; பொலீசார் வண்டிக்காரனை உடனே பிடித்தனர். எதிரிகள் மறைந்துவிட்டார்கள்.

நான் பைத்தியகாரியல்லள்.

சிலநாட்களுக்கு முன் கொழும்பிலே நடுத்தரவயதுள்ள ஓர் பெண்பைத்தியகாரியாகக்காணப்பட்டுவைத்தியசாலைக்குக்கொண்டுபோகப்பட்டாள். டக்ளர்லாறி அப்பெண்ணைப் பரிசோதித்து அவள் பைத்தியகாரியல்லவென்றும் பலவினத்தினாலே இவ்விதமாக ளிருக்கிறாளென்றும் அபிப்பிராயம் கூறினர். ஆகவே அவள் டிஸ்திரிக்ட்நீதிபதிக்குமுன் கொண்டுபோகப்பட்டாள். அப்பெண் நீதவானை நோக்கி ஐயா நான் பைத்தியகாரியல்லள் நான் உடுத்துக்கொண்டுநின்றபோது பொலீசார்கண்டு எனக்குப்பைத்தியமென்றும் மருந்துவாங்கித்தருவதாகவும் கூறி என்னை இழுத்து வைத்தியசாலைக்குக் கொண்டு போயினர். எனக்கு நான்குபிள்ளைகளுண்டு. வைத்தியசாலைக்குவந்தபின் எனது ஒருகுழந்தை இறந்துவிட்டதாகக் கேள்விப்படுகிறேன். நான் அதிகவறுமையுடையவள். எனக்குச் சுற்றமேனும் துணையேனுமில்லை. அரசாங்கத்தார் எனக்கு ஏதும் உதவிபுரிய வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை என்றனள். நீதிபதி குறித்த விஷயத்தைக் கவனிப்பதாகக் கூறினர்.

உபநயநம்.

திரிகோணமலை வில்லூன்றிக்கந்தசுவாமி கோவில் அர்ச்சகராகிய பிரமஸ்ரீ. இ. குமாரனந்தேசுவரக்குருக்களின் கநிஷ்ட சகோதரர் பிரமஸ்ரீ. குமாரசுவாமிசர்மாவுக்கு நிகழும் சித்திரைமீ 7உ (9-4-26) திங்கட்கிழமை உதயத்தில் நேர்ந்த சுபமுகூர்த்தத்தில் பூணூல் தரித்தலாகிய உபநயநமங்களகர்மஞ் செய்யப்பெற்று அன்று முதல் நான்கு நாட்களாகக் கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது. கடித.

விவாகம்.

யாழ்ப்பாணப் பொலீஸ்கோட்டில் "கிளார்க்" உத்தியோகத்தி லமர்ந்திருப்பவராகிய சுதுமலை ஸ்ரீ வ. பொன்னுச்சாமியவர்களுக்கும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நெடுங்காலமாக ஆசிரியராக விருந்த வண்ணார்பண்ணை ஸ்ரீ சபாபதியவர்களின் சிரேஷ்டபுத்திரியும் பிறந்தர் மாணவராகவுள்ள ஸ்ரீ ச. பாலசுப்பிரமணியமவர்களின் சகோதரியுமாகிய ஸ்ரீமதி. அமிர்தவல்லியம்மாளுக்கும் இந்தச் சித்திரைமீ 17உ வியாழக்கிழமைபிரவு 11மணிக்குமேல் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் விவாகம் வெகுசிறப்பாக நிறைவேறியது. தம்பதிகள் சகல ஐஸ்வரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம் சிவபிரான் திருவருள் முன்னிற்பதாக.

—வண்ணார்பண்ணை பிறந்தர் ஸ்ரீ சி. தம்பையாபிள்ளையவர்களின் புத்திரனும் நியாயவாதமாணவருமாகிய ஸ்ரீ முத்துச்சாமிப்பிள்ளைக்கும் பருத்தித்துறை காங்கேயன்துறை ஊர்காவற்றுறை முதலிய இடங்களில் இரேகுத்தலமை உத்தியோகத்தராக விருந்து இளைப்பாறியிருக்கும் ஸ்ரீ அ. செல்லப்பாபிள்ளையவர்களின் புத்திரி ஸ்ரீமதி. தில்லையம்மாளுக்கும் இந்தச் சித்திரைமீ 17உ வியாழக்கிழமை இரவு 11 மணிக்குமேல் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் விவாகஞ்சிறப்பாக நிறைவேறி, அன்று தொடக்கம் மூன்றுநாட்களாக மணமகன் மணமகள் இல்லங்களிற் கொண்டாட்டம் நடைபெற்றது. மணமக்கள் சகல ஐஸ்வரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும்வண்ணம் ஈசுவரன் திருவருள் முன்னிற்பதாக

மருந்தும் மதுவும்.

"மருந்துகளும் மதுவகைகளும் பிசாசின் இரு பெருங்கைகள் என்று காந்தியடிகள் அறிவித்துள்ளார். உலகத்திற் றோன்றும் போர் வெறுறிக்கு என்றும் துணைசெய்வது கள்வெறி, அபின்வெறி, வேறுபலக்கவல்துக்களால் விளையும் வெறி யென்று ஓர் ஆங்கில அறிஞர் ஒப்புக் கொள்ளுகிறார். போரால் பல வேறு தொழில் முறைகளும் வியாபார வகைகளும் நிலைகுலைந்திருந்தன. ஆனால் குடிவகைகளை விற்பனை செய்தவர்கள் மாத்திரம் கொழுத்த லாபம் அடைந்தார்கள். போர்க்கருவிகள் உடலைச் சிதைக்கின்றன; மதுவகைகளோ உளத்தையும் கெடுக்கின்றன; ஆன்மாவையும் அழிக்கின்றது. மதுவர்க்கத்தை அடியோடு ஒழிக்க முயலாது சும்மா இருந்தால், அது மனித வர்க்கத்தை அடியோடு அழித்துவிடும் என்பது அறிஞர் துணிபு. ஆதலால் தேர்தல் பிரசாரத்தில், குடியைக் கெடுக்கும் குடியெனும் பேயை ஒழிப்பதையும் ஒரு முக்கியமான கொள்கையாகக் கொள்ளவேண்டுமென்று மகாத்மா, சமீபத்தில் வெளியிடப்பெற்றுள்ள 'யங் இந்தியா' தலையங்கத்தில் எழுதுகிறார். "குமரன்"

திரிகோணமலை மாதர் ஐக்கிய சங்கம்.

மேற்படிசங்கத்தின் கூட்டமொன்று சென்ற ஏப்பிரல்மீ 17உ சனிக்கிழமை பின்னேரம் ஸ்ரீ சண்முகவிதாலயத்தில் ஸ்ரீமதி தா. பொன்னம்மாளின் அக்கிராசனாதிபத்தியத்தின் கீழ்க் கூடிற்று. அத்தருணம் சங்கத்தினங்கத்தவருளொருவராகிய ஸ்ரீமதி ந. நீலாயதாக்ஷி அம்மாளால் 'இசைவாது'வென்ற சரித்திரம் உபந்நியாசிக்கப்பட்டது. அங்கத்தவர்களாற் குறிப்புரை கூறப்பட்டுத் தேவார பாராயணத்தோடு கூட்டம் சமாப்தியாயிற்று.

—அடுத்த கூட்டம் நிகழும் மேமீ 1உ சனிக்கிழமை பின்னேரம் மேற்படி விதாலயத்தில் ஸ்ரீமதி அ. விசாலாட்சிப்பிள்ளையின் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ் தேவாரபாராயணத்தோடு கூடிற்று. அத்தருணம் அங்கத்தவருளொருவராகிய ஸ்ரீமதி க. யோகாம்பிகை அம்மாளால் "விருத்தகுமாரர்பாலரான" சரித்திரம் உபந்நியாசிக்கப்பட்டது. அத்துடன் புலோலியம்பதி வாசராகிய பண்டிதை ந. பத்மாசனி அம்மாளவர்கள் சங்கத்தின் நன்மையைக்கருதி அனுப்பிய கட்டுரை ஒன்று காரியதரிசியால் வாசிக்கப்பட்டு அங்கத்தவர்களின் குறிப்புரை கூறப்பட்டபின் கூட்டம் சமாப்தியாயிற்று. கடித.

திருநெல்வேலிச் சைவவித்தியாசாலைப் பரிசளிப்புக் கொண்டாட்டம்.

சென்ற குரோதனஞு பங்குனிமீ 25உ (8-4-26) சனிக்கிழமை மாலை 6 மணியளவில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ஸ்ரீ அ. பொன்னையா அவர்கள், பள்ளிக்கூட மாணவர் இருமருங்கும் நிற்ப, மேளவாத்தியத்துடன் சென்று, பாடசாலைத் தோட்டத்தைப் பார்வையிட்டனர். ஆறரைமணிவரையில் வித்தியாசாலை மண்டபத்தில் அவ்வதிபர் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ், தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமானது.

ஓர் மாணவனால் அக்கிராசனருக்கு வந்தனோபசாரப் பாட்டுப் பாடப்பட்டபின், இரு மாணவரால் சபையோர்க்கு வந்தனோபசாரப்பாடப்பட்டது. பின் தலைமை ஆசிரியரால் அறிக்கைப்பத்திரம் வாசிக்கப்பட்டது. "நமது சமய விருத்திக்காக நாம் என்ன செய்யவேண்டும்" என்னும் விஷயத்தில், ஓர் மாணவன் பிரசங்கஞ் செய்தனன். இன்னோர் மாணவனால் "குங்கிலியக் கலயாசனார் சரித்திரம்" பக்கவாத்தியசகிதமாகப் பிரசங்கஞ் செய்யப்பட்டது. இவ்வித்தியாசாலை ஆரம்பமான நாட்டொடக்கம் இற்றைநாள்வரையும் வித்தியாசாலைக்குச் செய்யப்பட்ட காரியங்கள் யாவையும் தொகுத்தும், மானேசர் நாமமும், ஆசிரியர் நாமங்களும் சேர்த்தும், நான்கு மாணவர்களால் ஓர் கொண்டிசிந்து பாடப்பட்டது.

சுயராச்சிய சம்பந்தமாக "உணரக்கூடாத" என்னும் முதற்றொடக்கத்தையுடைய பாட்டுச் சிறுமாணவிகளால் பாடப்பட்டது. பெண்களுக்குக் கல்வி அவசியமா என இரு மாணவிகள் தர்க்கித்துக்கொண்டு நிற்குஞ் சமயத்தில், இன்னோர் மாணவி வந்து, அது சம்பந்தமாக, கோயில்களிலே உயிர்ப்பலி இடுதல் கூடாதெனவும், அப்படிச் செய்வோர் கல்வி ஞானமில்லாதவர்களே யென்றும், யாவர்க்குங் கல்வியவசியம் வேண்டியது என்றும் அவர்கள் ஐயத்தை நீக்கிப் போயினர். பின் விவேகானந்த சுவாமிகள்மீது ஒரு பதம் சில மாணவிகளால் படிக்கப்பட்டது.

"கமத்தீஸ்வரராசன்" சரித்திரம் அபிநயாலங்காரத்துடன், சம்பாஷணை முறையில்நடித்துக் காட்டப்பட்டது. மீனாட்சியம்மன் பேரில் ஓர் கீர்த்தனம் படிக்கப்பட்டது. அப்பால் சபாநாயகரவர்களால் 8-ம் வகுப்புத் தொடக்கம், பாலர் கீழ்ப்பிரிவீறாக உள்ள மாணவாகளுக்கு அரசினர் பரீக்ஷையிற் சித்தியடைந்ததற்காகவும், சமய பாடத்தில் தேர்ச்சியடைந்ததற்காகவும், வகுப்புமுதன்மைக்காகவும், பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காக வந்ததற்காகவும், விளையாட்டில் முதன்மையடைந்ததற்காகவும், புத்தகம் முதலாம் பரிசுகள் வழங்கப்பட்டன. பின்னர் பாடசாலைத் தோட்ட வேலையில், திறமையுடைய மாணவர்களுக்கு, மண்வெட்டி, வாளி, கடகம், கத்தி முதலாம பரிசுகள் வழங்கப்பட்டன. பின் அக்கிராசனர் வேண்டுகோட்படி, ஸ்ரீமங்கையர்க்கரசி வித்தியாசாலைத்தலைமையாசிரியரும் கோப்பாய் மணி மந்திர வைத்தியபரிபாலன சங்கக் காரியதரிசியுமாகிய ஸ்ரீ. வை. காசிலிங்கம் ஆசிரியரவர்களும், பாடசாலைத் தோட்டமுதலியவரும், வித்தியாசாலையிலிருந்தியில் முயற்சியுடையவரும். தற்போது கொழும்புவாசியும் பிறந்ருமாகிய ஸ்ரீ. க. சிவப்பிரகாசமவர்களும் பேசிய விஷயங்களையிட்டுக் குறிப்புரை கூறினர். பின் அக்கிராசனரவர்கள், மாணவர் கண்டதைச் செய்யுங் குணமுடையராய் இருப்பதால், சிறுவயசு தொடக்கமாகவே ஒரு கிழமையில் ஒரு நாளைக்காவினும் ஆலயத்திற்குக் கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்றும், இவர்களுக்கு உடல், உளம், உயிர் என்பவைகளை விருத்தி செய்யக் கூடியதுமான கல்விகளைக் கற்பித்தல் வேண்டுமென்றும், மாணவிகளுக்கு பன்னவேலை முதலாம் தொழில்கள் பயிற்றல் அவசியமென்றும், மாணவர்க்குத் தோட்டவேலை குடில் கட்டல், கயிறு திரித்தல், முதலாம் வேலைகள் அவசியமென்றும், இயல் இசை நாடகம் முதலிய முத்தமிழும் கற்பித்தல் வேண்டுமென்றும் கூறினர். பின் சிறு மாணவிகளால் வந்தனோபசாரப்பாட்டுப் பாடப்பட்டது. தலைமை யாசிரியரால் சபையோர்க்கும் சபாநாயகர்க்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டபின், தேவாரபாராயணத்துடன் கூட்டம் நிறைவேறிற்று. கடித.

புருஷர்களுக்குரிய சாமுத்திரிகாலட்சணங்கள். 32.

(1) ஐந்து நீண்டைந்துநேர்ந்தேயாறிடமுயர்ந்தேழுசேர்ந்து, முந்துமூன்றகன்றுமூன்றுகுறுகி மூன்றுழ்ந்திருக்கு மாதலில் குணங்கண் மூப்பானிரண்டொடு மமர்ந்தமாந்த, நிந்திர திருவினோங்கியினிதுவீற்றிருப்பர்மாதோ.

(இ-ள்.) சரீரத்தில் ஐந்திடங்கள் நீளமாயும், ஐந்தாயிருதுவாகியும், ஆறிடங்கள்உயர்வாகியும், ஏழிடங்கள்சிவப்பாகியும், முற்பட்டதாகியமூன்றிடங்கள்அகலமாகியும்,மூன்றுகுறுகியதாகியும், மூன்று ஆழமாகியும், விளங்குகின்றகெடுதலில்லாத குணங்கள் மூப்பத்திரண்டுடன் பொருந்திய புருஷர்கள் தேவேந்திரனைப் போலச் செல்வமிகுந்து இனிமையாக வாழ்ந்திருப்பார்கள் என்பதாம்.

(2) நீண்டிடமைந்து கண்கைகதப்பு நீண்முழந்தாள் மூக்கு, மாண்டு நேர்ந்திருக்குமைந்துமயிர்வீரனுகிர்தோல்வெண்ப, லீண்டுபொரா லெற்றி தோள் வயிறுநுகை மூலம், பூண்டுயில் கொள்ளு மார்பம் பொற்புடைப் புறங்கையாமால்.

(இ-ள்.) முற்சுட்டிய நீண்டிருக்கும் ஐந்திடங்களாவன:— கண்கள், கைகள், கதப்பு, கெடிதாகிய முழங்கால்கள், மூக்கு என்பனவாம். மாட்சிமைபட்டு மிருதுவாகவிருக்கும் ஐந்திடங்களாவன:— உரோமம், விரல்கள், நகங்கள், தோல், வெண்மை தங்கிய பற்கள் என்பனவாம். உயர்வோடு கூடிய ஆறிடங்களாவன:- நெற்றி, தோள்கள், வயிறு, இரண்டுகை மூலங்கள், ஆபரணம் விளங்குகின்ற மார்பு, அழகிய புறங்கை யென்பனவாம்.

ச பொன்னுஞ்சுவாமி சிருருக்கள்,
அம்மன்கோயில்
சுதுமலை.

மத்தியமாகாணச்சைவமகாசபை.

நிகழும் அஷ்ய ஆண்டு சித்திரைத்திங்கள் 6-ம் நாளாகிய (1-4-26) ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 7 மணியளவில் கண்டித்தமிழகமண்டபத்தில் மத்தியமாகாணச் சைவ மகாசபையின் ஆதரவின்கீழ்நடட்டம்நடாத்தப்பட்டது அத்தருணம் உபசபைத்தலைவருள்ஒருவாகும்திரு. கோ. சப்பையா தலைமைவகித்திருந்தனர். திரு. ச. சுந்தரமூர்த்தி அவர்களால் "சிலப்பதிகாரம்" என்னும் அரிய தமிழ்க்காவியத்தைப்பற்றி யோர் சிறந்த கட்டுரை வாசிக்கப்பட்டது. பிரசாரகர் பாரதியார் கூறிய

"யாமறிந்தபுலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோவைப்போல்மை
பூமிதனில் யாங்களுமே பிறந்ததிலை, உண்
வெறும்புகழ்ச்சியில்லை"

என்னும் விருத்தப்பாவை முகவுரையாகக் கொண்டு தமிழ்ப் புலவர்களின் திறமையும், தமிழ் இலக்கியங்களின் சிறப்பும், பண்டைக்காலத்துத் தமிழர்களது உன்னத நாகரிக நிலையும் தமிழாசர்களது நீதியும், பெண்களது கற்பின் பெருமையும் !ஊழ்வினைக்கேற்ப கடவுள் இன்ப துன்பங்களாகிய மருந்தை பூட்டி வினைகளையும் மாண்பும் இக்காவியத்தில் தெள்ளிதில் அறியக்கிடக்கின்றதென மிகவும்!இனிய செந்தமிழ் நடையில் விளக்கினர். மேலும் கோவலன் கண்ணகி சரித்திர வரலாற்றையும் கூறினர். திருவாளர் ம. சி. பரமானந்தம் அவர்களாலும் சபைத் தலைவராலும் குறிப்புரை கூறப்பெற்றுத் தேவாரபாராயணத்துடன் கூட்டம் 8½ மணியளவில் நிறைவெய்தியது. கடிதி.

உத்தியோகம் வேண்டாம்.

சப் !மாஜிஸ்ட்ரேட் தட்டானுகிறார்.

ஸ்ரீமான் டி. ராமன் தட்டான் !B. A. என்பவர் மலையாளத்தில் தட்டார் வகுப்பைச் சேர்ந்தவர். 1908-ம் ஆண்டில் இவர் மலையாளம் ஜில்லா கலெக்டர் காரியாலயத்தில் அமர்ந்தார். 1922-ம் வருஷத்தில் ஸப் மாஜிஸ்ட்ரேட்டாக நியமிக்கப்பட்டார். இப்பொழுது அவர் அவ்வேலையை ராஜீநாமா செய்திருக்கிறார். தமது முன்னோர்களின் தொழிலாகிய தட்டாரத்தொழில் அவர் இனிமேற் கொள்ளப்போகிறாராம். அவர் இத்தகைய முடிவுக்கு வந்ததற்கு உலகிலும் உத்தியோக வாழ்க்கையிலும் இப்போது எல்லாம் தலைகீழா யிருப்பது ஒரு காரணம். மற்றொரு முக்கிய காரணமென்னவெனில், தமது புதல்வர்களை இம்மாதிரியான வாழ்க்கையிற் பழக்கிவிட்டால், அரசாங்க உத்தியோகங்கள் கொஞ்சமாயிருப்பதால்,அவர்களுக்கும் மற்றும்அவர்களுக்குப்பிறக்கும் குழந்தைகளுக்கும் உத்தியோகங் கிடைப்பது துர்லப மாதலின் அவர்கள் பெரிதுங் கஷ்டப்படுவார்களென்பதே. ஸ்ரீமான் ராமன் தட்டான் 18 வருஷம் உத்தியோகம் பார்த்தாராயினும் குடும்பத்துக்குச் சொத்து எதுவும் சேர்த்து வைக்கவில்லை. ஆனால் தமது உத்தியோக வாழ்க்கையில் லஞ்சம் வாங்குதல் முதலியவைகளினால் "ஜனங்களின் ரத்தத்தை ஒரு சொட்டுக்கூட உறிஞ்சியதில்லை' என்று அவர் சந்தோஷப்படுகிறார். அவர் ராஜீநாமாக் கடிதத்தின் சில பகுதிகளை இங்கே தருகிறோம்:—

கள்ளிக் கோட்டையிலிருக்கும் மலையாளம் ஜில்லா கலெக்டர் துரைக்கு,

வள்ளுவ நாடு ஆக்டிங் ஸ்டேஷனரி ஸப் மாஜிஸ்ட்ரேட் டி. ராமன் தட்டான் பி. ஏ. எழுதியது.

கனந்தங்கிய ஐயா, சென்ற நான்கு ஆண்டுகளாக நான் ஸப் மாஜிஸ்ட்ரேட் உத்தியோகம் பார்த்து வந்திருக்கிறேன். மேன்மையான அரச பீடத்திலிருந்து இந்திய அரச சக்ரவர்த்தியின் பிரதிநிதியாகவே என்னை எண்ணிக்கொண்டு அவருக்குரிய எல்லா அதிகாரங்களையும் செலுத்திவந்தேன். எந்த மனிதனிடத்தும் ஏற்பட்ட பயத்தினால் என் மனத்தின் நடுநிலை ஒரு சிறிதும் எக்காலத்தும் கோணியதில்லை. ஏசுநாதருக்கு நிகழ்ந்தது போல் இப்போது நானும் ஒரு மலை யுச்சியில் கொண்டு நிறுத்தப்பட்டு, உலகத்துக் கெல்லாம் அரசனாக வேண்டுமானால் பாதாளத்தில் குதிக்கும்படி கேட்கப்படுவதாக உணர்கிறேன். அந்தப் பெரிய மகானுடைய அடிச்சுவடுகளைப் பற்றி நானும் இதுகால் "முடியாது" என்று உறுதியாகப் பதில்சொல்லத் தீர்மானித்துவிட்டேன். மேன்மை பொருந்திய இவ்வுத்தியோக பீடத்தில் நான் இருக்குமளவும், அரசர்பெருமானின் பிரதிநிதியாக நடுக்கண்ட நியாயம் வழங்குவதில், மனிதர்களின் !தராதரத்தை நான் உத்தேசிக்க முடியாது. ஆனால் என்னைச் சுற்றியுள்ள நிலைமையில் என் போன்ற ஒருவன் இவ்வாறு வேலை நடத்துவதற்கு இசைந்தவனன்று என்பதை உணர்கிறேன். இது குதிரைகளை வண்டிகள் இழுக்குங்காலம்; :மனைவியர் கணவர்களை நடத்தும் காலம்; போலீஸ்காரர் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்குக் கட்டளைபிறப்பிக்கும் காலம். இத்தகைய தலை கீழான நிலைக்கு நான் பணிந்து அரசர்பெருமானுக்குத் துரோகியாகப்போவதில்லை.

என் தந்தையாரின் சுத்தி, பட்டடைகளுக்கிடையே நான் பிறந்து வளர்ந்தவன். மீண்டும் அவைகளிடமே நான் !திரும்பிச் செல்ல வேண்டும். "நான்" என்னும்போது என்னை மட்டும் குறிப்பிட வில்லை. இனி வாழையடி வாழையாகத் தோன்ற விருக்கும், எனது சந்தியார் எல்லோரையும் சேர்த்தேசொல்கிறேன் எனது குறைகள் எவ்வாறிருப்பினும், நான் மலையாளத்தில் "தட்டார்" எனப்படும் எழை சமூகத்தைச் சேர்ந்தவனாயிருப்பதை முன்னிட்டேனும், எனம் பொருந்திய தாங்கள் என்மீது அநுதாபங்கொண்டு ரிவினால் இலாகாவில் உயர்ந்த உத்தியோகத்தை எனக்கு அளிக்கலாம் அப்போது கௌரவத்துடனும், அநேகமாகப் பட்டங்களுடனும் வாழ்ந்து மாணமுறுவேன். உனக்குப் பின் நான் சில புதல்வர்களைவிட்டுச் சென்றால் அப்போது வரும் கலெக்டர்களும் ஒருகால் மனமுவந்து அவர்களுக்கும் உத்தியோகங்கள் அளிக்கலாம். ஆனால் அவர்களுக்கு இன்னும் சந்ததி பெருகினால், அவர்களெல்லாருக்கும் அரசாங்கத்தாரால் உத்தியோகம்கொடுத்தல் இயலாமற்போகுங்காலம் ஒன்று வந்தே தீரும் பின்னர் அவர்கள் என் செய்வார்கள்? தங்களுக்குச் சொந்தமான தொழிலுக்கே அவர்கள்திரும்பியாகவேண்டும். அக்காலத்தில் அவர்கள் இவ்வாறு பழைய தொழிலுக்குத் திரும்பிவர நேரும்போது, எவ்வளவு துன்பப் படுவார்கள் என்று சொல்லவேண்டுவதில்லை. அப்படிக்கின்றி, நான் இப்பொழுதே எனது சாசுவத உத்தியோகத்துக்குப் போய்விட்டால் எனது சந்ததியார் அநேகருக்குத் துன்பம் நேரிடாமற் காத்தவனாவேன். என் குடும்பத்தொழிலை நான் இன்னும் மறந்துவிடவில்லையாதலால், அத்தொழிலுக்குத்திரும்பிச் செல்வது எனக்கு அவ்வளவாகத் துன்பந்தாராது. ஆதலின் ஒருகணமும் தாமதியாமல் நான் அத்தொழிலுக்குத் திரும்பிச் செல்வதே அறிவுடைமையென்றுதாங்கள் கருதவில்லையா?

மேலும், சிங்கத்தின் தோலைப் போர்த்திக் கொண்ட ஆட்டுக்குட்டியாக நான் வாழ்வு நடத்தி வருவேனாயின், எனது மனைவி மக்கள் அச்சிங்கத்தோலின் சாயையினால் பெருமை பெற்று மற்றவர்களால் பூஷிக்கப்பட்டுவருவார்கள். எனது 55-ம் வயதில், எனது சிங்கத்தோலை நான் இழக்க நேரிடும் போது அவர்களுடைய கதி என்னும்? அந்தோ! அதைப பற்றி என்னால் நினைக்கவுங் கூடவில்லை. அரசர்க்குரிய பெரும்பதவியினின்று திடீரென விழுந்து அவர்கள் தட்டார வேலைக்குச் செல்ல நேரிடுமே! அப்போது !தீவனோபாயத்துக்கு அவர்கள் பொது ஜனங்களின் -தயவையன்றோ எதிர் பார்த்தவர்களாயிருப்பார்கள்? ஆதலின் அப்படிப்பட்ட பொது ஜனங்களை, நான் அபராதம், சிறைவாசம் முதலிய தண்டனைகளை விதித்து விரோதித்துக்கொள்ளலாமா?.....மேற்கூறிய காரணங்களை முன்னிட்டு, ஒரு கணமுந்தாமதியாமல்உத்தியோக வாழ்வினின்றும் நான் விலகிக்கொள்ள வேண்டுமென்னும் முடிவுக்கு வந்திருப்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.....எனது பொன் விலங்குகளைக் கழற்றி விட்டு எனது ராஜீநாமாவை ஒப்புக்கொண்டு எனது இயற்கையான வாழ்வுக்கு என்னைத் திரும்ப அனுப்பி வைக்கும்படி தங்களை மீண்டும் ஒருமுறை பிரார்த்திக்கொள்கிறேன். (நவசக்தி.)

சைவ சித்தாந்தம் தனித்தமிழியக்கமா.

(ஸ்ரீமத் சிவத்தியாகாநந்த மஹரிஷிகள் எழுதியது.)

தற்காலம் பிராமணர்களிற் சிலர் பலர் தங்களது பிறப்பு ஒழுக்கங்களாகிய வேதமோதுதல் முதலியவற்றை ஜீவனோபாயத்தையும் உத்தியோகஆசையையும்முன்னிட்டுவிட்டிவிட்டார்களென்ற காரணத்தால் தமிழர்கள் ஸநாதன தர்மமாகிய நமது இந்து மதத்தையே வேரோடு கல்லியெறியத் தொடங்கு கின்றனர். ஒரு காலத்து வேதம் பொது சைவ வைஷ்ணவங்கள் சிறப்பு என்றிருந்த கொள்கை மாறி இப்பொழுது ஒரு சாரார் படிப்பிற் றேறிய சைவர்கள் வேத நிந்தனை செய்யவும் தலைப்பட்டிருக்கின்றனர். அவரது வெளறியமதிதான் என்னே! சைவமானது வைதெளத்த மதங்களைப் போல வேதபாஹ்யமான மதமா? அப்படியானால் தேவாரமாகிய நூல்களிலும் மற்றும் சித்தாந்த சாஸ்திரங்களிலு ; வேதப் பிரமாணியங் கூறப்பட்டிருக்கும் காரணம் என்னே? அப்படி வேதம் சைவத்திற்குப் பிராமண நூலன்றெனின் சைவம் புதச் சமயங்களுள் ஒன்றாகக் குறிக்கப்பட வல்லவோ வேண்டும். ஆனால் அது அகச் சமயம் ஆறனுள் ஒன்றாகப் புகுந்தவகை எப்படி? இவ்வுண்மைகளை யறிந்தவரெவரேனும் வேத நிந்தனை செய்வார்களா? இவ்விஷயங்களைப் பற்றித்தான் ஒரு சிறிது ஆராயப்படும். வேதம் பொது வென்றதன்நியாயம் சைவமும் வைஷ்ணவமும் தனிப்பட்டு வெளித் தோன்றுவதற்கு முன்னிருந்த சமுகமானது வேத மந்திரங்களை ஆதாரமாகக் கொண்டு தன்து ஸம்ஸ்கார நெறியே இப்பொழுதும் அகச்சமயிகளது ஒழுக்கமாகும். அன்றேல் தற்காலம் தென்புலத்தார் தெய்வம் முதலியவர்களைப் பேணும் வழக்கத்தை மாற்ற நினைப்பதும் விட நினைப்பதும் வைதிக விரோதமாகும் சிற்சில திருத்தனைகள் காலவியல்பிற்கு ஒத்ததனவாக வில்லை யென்ற காரணத்தால் மூல ஆதாரமான ஆசாரங்களையே யாவரும் விட்டுவிட வேண்டுமெனப் போதிப்பது சமூக வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் விளைக்கப்படும் பெருந் தீங்காகும். அரசியலுக்காக உழைக்கும் பத்திரிகைகளும் ஜனங்களும் சமூகத்தையும் மதத்தையும் பேர்த்தெறியப் பார்ப்பது பெரிதும் விசனிக்கத்தக்கது. இவ்விஷயத்தைப்பற்றிச் சவிஸ்தாரமாக இன்னொரு !சமயம்வாய்த்துழிஎழுதுவேன். இனி சிறப்பெனப்படும் சைவ வைஷ்ணவங்களின் முன்னதாகிய சைவப் பயிரின் வளர்ச்சியைப்பற்றிக் கவனிப்போம். இவ்விஷயத்தில் தற்காலம் பலரும் மயக்க வுணர்ச்சி கொண்டவாய்க்கு வந்தபடி உளறத் தொடங்குகிறார்கள். ஒரு பத்திரிகை வேதங்களே தமிழில் முதற் கண்ணிருந்து பின்பு வடமொழிக்கட் சென்றதென்கிறது! இதனின்றும் விந்தை உலகில் உண்டோ? இரு வேதத்திற் சொல்லப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட ரிஷிகளும் அவர்களது ஸ்தோத்திரப் பாமாலைகளிற் காணப்பட்ட இதிகாசங்களின் நாயகர்களும் தமிழரும் இன்னாரிருந்த நாடு தமிழ்நாடுமே யாமோ? இத்தகைய தன்மையில் உயிர்ப்பாவதையை விட்டு இறந்து போனதாக எண்ணப்படும் ஸம்ஸ்கிருத பாஷையில் மொழிபெயர்த்தது யாவர்? மொழிபெயர்த்ததினது காரணம் தான் என்னே? இத்தியாதி கேள்விகளுக்கு இக் கோட்பாட்டினர் என்ன பதிலுரைப்பர்? ஆங்கிலம் கற்ற காரணத்தினாலே விஷயங்களைப் பிறழ உணர்ந்து கூறுதல் என்னும் வழக்கு நவீனமாக நம் தமிழ் நாட்டிற் றோன்றியுள்ள தொன்றாகும். மேலும் உலகப் பெரியாராய் வக்கீல்களாகவும் கலெக்டர்களாகவும் ஜட்ஜுகளாகவும் நிற்பவர் மதத்துக்குந் தாங்களே அதிகாரிகளாக நினைத்து மத நூல்களுள்ள விடங்கூட அறியாமல் தங்களுடைய சொற்ப அறிவுக் கெட்டிய வரையே ஸர்வமுமென மதித்து ஸநாதன தர்ம மென்பதை இந்துமதமெனக் கூறி அவ்விந்து மதத்திற்கு அதிகாரம் வாய்ந்த நூற்களையெல்லாம் ஒழுக்கங்களிவை யென்று மதித்தறியாது பல மேனாட்டாங்கிலர்களும் மதிக்குமாறு விஷயங்கள் எழுதிவிடுகின்றனர்; அதனையும் சில அதக்கக்கூடத் தலைவர்கள் வெளியிட்டுப் பரப்புகின்றனர். என்னே ஆச்சரியம்? வருஷக்கணக்காக மத நூற்களை யோதி மந்திரங்களை யப்பியாசித்துக் கடைபோக வியற்றித் தத்வ விவசாரம் செய்து கருந்தனமாகக் கண்டுபிடித்த மதவுண்மைகளைப் பலருக்கும் தெரிக்கதனுஷ்டிக்குமாறு எழுதிவைக்கும் வழக்கம் மிகுந்த இந்நாட்டில் இப்போலிப் பெரியார், மதவாம்பின்னதென்றும் அவ்வாம்பிற்கடங்கிப் பேசு முறைமை யின்னதென்றும் அறியாதாராய்ப் புகல்பவை ஆணித்தரமான மொழிகளென மூடஜனங்களால் கருதப்படும் நிலைமைக்கு வந்ததே யென்பதுதான் இப்பொழுது அறிவாளிகளுக்குள் தோன்றியிருக்கும் பெரும் விசனமாகும். இனியாவது லௌகிக நெறிகளில் ஊடாடித் திரிபவர்கள் மதசம்பந்தமான தடுமாற்ற மொழிகளை உறுதி மொழிகளாகத் தத்தம் தாமச் செய்கை கொடுபிடிவாதமாக உரைக்க முன் வராமட்டார்களென நம்புகிறேன். உலகத்து இதர மதங்களை எவ்வெவ்வளவு தூரம் படித்தறிந்த போதிலும் தமது மதத்தினது உண்மைகளையம்முறைபிற் பரிசீலனை செய்து பார்ப்பார்களாயின் அவையும் இதர மதங்களைப் போலவே வெகு காலத்துக்கு முன்பு அமைக்கப்பட்டனவென்பது வெளியாகும். இதுவே சுருதியும், யுக்தியும், அநுபவமும் இதை விடுத்து மற்றவை ஒப்புக்கொள்ளத் தக்கவையல்ல. இம்முகமாகப் பார்க்கும்கால் சிவஞான முனிவரது காலத்துக்குப் பின்பு தமிழர்களுக்குள் எழுந்துள்ள சைவ சித்தாந்தத்தைப் பற்றிய பிறழ் வுணர்ச்சி எத்துணையும் பொருந்தாதென்பதே விளங்கும். மெய்கண்டாரது சாத்திரத்தையும் சிவஞான முனிவரது !மாபாடியத்தையும் பார்த்தே சிவஞான போதத்தின் 12 ஸம்ஸ்கிருத சூத்திரங்களுஞ் செய்யப்பட்டுள்ளன வென்று தற்காலம் !தழ்ந்துணர்வார்களது மதியின் பேதமையையன்றோ யுணருமாறு தென்னாட்டுச் சைவ சித்தாந்தம் வளர்ந்த வழியைப்பற்றிச் சற்றுக் கூறுவல். சைவம் என்ற மதமே விந்திய மலைக்கு வடக்கண் தொடங்கியதே யன்றித் தெற்கண் உண்டானதல்ல வென்பது அறிவாளிகளது மதம்.

கைலாச மலைக்குப் பக்கத்திலுள்ள காசுமீர் தேசத்தில் சுமார் 5000 வருஷங்களுக்கு (2) முன்பு துருவாஸரென்ற மஹரிஷி திரியம்பகர், அமர்த்தகர், ஸ்ரீநாதர் என்னும் சீஷர்களை முக்கிய சீஷர்களாகக் கொண்டு சைவத்தை ஆதியில் தொடங்கினார். அவரது பீடமானது தற்காலம் மத்திய ஆசியாவிலுள்ள பாக் (Balk) கென்னுமிடம்வரையிற் கூடப்பரவியிருந்தது. இச்சைவத்திலிருந்து கிளைத்தனவே கைலாசம் பௌண்ட்ரம், கலாபிக்கிராமம், பதரிகம், மத்தமயூரம், உத்தராண்யகம் கோவிஷிணம், அமர்த்தம், ரணபத்ரம், கோலகி முதலிய இடங்களிலுள்ள ஆசார்யபீடங்களும் அவற்றின் கொள்கைகளும் விசேஷங்களுமாவன. இவையெல்லாம் துருவாஸரும் அவரது சீஷர்களும் பரப்பிய சைவத்தின் பேதங்களாம். மேற்கண்ட தலங்களுள்ள பிரதேசங்களைப்பற்றி ஸ்ரீமான் வி. வி. ரமணசாஸ்திரியார் 1924-ம்ஆண்டு இந்து அநுபந்தத்தில் எழுதியுள்ளதைப் படித்தறிந்து கொள்ளுக. மேற்சொன்ன மடங்களின் பெருமை சிறுமைகள் அம்மடங்களை யாதரித்த அரசர்களின் பெருமைகளைப் பொறுத்த அளவாகும். சங்கபீடத்திலிருந்துதோராம் பீடமும், அமர்த்தக பீடத்தைச் சேர்ந்த வரால் உத்தம சிகர பீடமும், ரணபத்ர பீடத்திலிருந்து கோரதிகபீடமும், மத்த மயூர பீடத்திலிருந்து கொங்கண கோகர்ண புஷ்பகிரி பீடங்களும், கோகி பீடத்திலிந்து குண்டூர், கோதாவரி, பெல்லாரி, கர்நூல் தஞ்சாவூர் திருநெல்வேலி ஜில்லாக்களிலுள்ள பீடங்களும் வந்தனவென விளக்கிக்காட்டியிருக்கின்றார். அதனால் விந்தத்துக்கு வடக்கே காஷ்மீரத்தில் தொடங்கிய சைவமானது கோலகி பீடத்துவாராதென்னாட்டிற்கு வந்ததெனலாம் அதற்கு முன்பே தென்னாட்டில் அமர்த்தக பீடமானது ஸ்தாபிக்கப் பட்டிருந்தது. இவ்வமர்த்தக பீடத்தைச் சேர்ந்த சிவாசாரியர்களே கோவிலாகமங்களைச்சரிவர அநுட்டித்து வந்தவர்களாவர். இவருட்சிறந்தவர் அகோரசிவாசாரியர் (1158 கி.பி.) என்னலாம். இச்சிவாசாரியர்களில் வடநாட்டில் வழக்கிலிருந்த ஸோமசம்பு, வருணசிவம், ஞானசிவம், மற்றும் ஆகமங்கள் இவற்றைத் திரட்டி எழுதியவர் வாகீசவர பண்டிதர் என்பார். இவரது நூலே ஞானாமிருதம் என்பது. இது 1180 கி. பி. யில் எழுதப்பட்டது. இவ்வகையாகச் சிவாகமங்கள் முதல் முதல் தென்னாட்டில் வடமொழியிலேயே பிராண சைவர்களால் கொண்டுவரப்பட்ட விஷயம் நன்கு விளங்கும். ஸ்ரீகண்டர், ராமகாந்தர், ஸுதயோ ஜோதி, போஜன், அபிநவகுப்தன் முதலியோரது ஸம்ஸ்கிருத பிரகணங்களைப்போல முதல் முதல் தமிழில் எழுதத் தலைப்பட்டவர் மெய்கண்டார் என்பவர் இவர் வைஷ்ணவ பக்திவாய்ந்த குடும்பத்துவந்தவர். கம்பரது போஷகரான சடையப்பர் இவரது மாதாமகரென்று தெரிகிறது. எனினும் இவருக்குச் சிவத்திளிடத்துப் பற்று அதிகப்படவே பரஞ்சோதியென்ற ஒரு பிராமண குருவையடுத்து வடமொழியிலுள்ள சைவாகமங்களை நன்கு கற்றார். பின்னர் வடமொழிப் பத்தியின்படி ரௌரகாகமத்திலிருந்த 12 சூத்திரங்களாகிய சிவஞான போதத்துக்கு ஒரு மொழிபெயர்ப்பு பிரகண முறைமையாகச் செய்தார். இதன் காலம் சுமார் 1200 கி. பி. ஆகு . அவருக்குத்தமிழில் புது சைவ பீடம் ஒன்று ஸ்தாபிக்கவேண்டுமென்றும் ஆசை அதிகமாகவிருந்தபடியால் ஸம்ஸ்கிருதத்திலிருந்த சைவக்கொள்கைகளில் வேண்டியவற்றைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் வேண்டாதனவற்றை நிராகரித்தும் ஒரு புதுக்கொள்கை ஏற்படுத்தினார். அமர்த்தக வகுப்பைச் சேர்ந்த அகோர சிவாசாரியரது கொள்கைகள் பிடிக்காமற்போகவே அப்பொழுது தென்னாட்டில் வந்து பரவியிருந்த கோலகி பீடத்தத்துவங்களை உட்கொள்ளலாயினார். அமர்த்தக வகுப்பினர் தாங்களே சிவங்களென்ற மேட்டிமையும் தங்கள் சொல்லுக்குமேற் சொல்லில்லையென்ற மதமும் வாய்ந்தவர்கள். அதனாலே தான் கோலகிமதமானது தென்னாட்டில் இல்குவாகப் பரவியது. மெய்கண்டார் இக்கோலகி கொள்கையை யுளப்படுத்தியே தமது சிவஞான போதத்தை எழுதினார். வடமொழியிலுள்ள பிரகரண நூல் களின்மாதிரியைப் பின்பற்றி இதனைச் செய்தாரென்பதும் முன்பே கூறப்பட்டது.

இம்மெய்கண்டாரது சைவ சித்தாந்தத்தினைத் துலியமாக விளக்கியவர் குரியனார் கோவில் மடத்தைச் சேர்ந்த சிவாக்கிர யோகியேயென்போம். ஏனெனில் மெய்கண்டாரது சிவஞான போதமானது எந்த வடநூலின் மொழி பெயர்ப்பாக அமைந்துள்ளதோ அந்த வடநூலுக்கே சிவாக்கிரயோகி ஒரு பாஷ்யம் வடமொழியிற் செய்தவராவர். இச்சிவாக்கிர யோகியினது வடமொழி பாஷ்யத்தினுள்ள ஷாரத்தைத் திரட்டியே திருவாவடுதுறை மடத்துச் சிவஞானமுனிவர் 1770-இ—பியில் தமது சைவ சித்தாந்த மாபாஷியம் செய்தது. அவ்வடமொழிப் பாஷ்யத்தையும் இச்சிவஞான மா பாடியத்தையும் படிப்பவர்க்கு இவ்வுண்மை நன்கு விளங்கும். எனினும் சிவஞான முனிவர் சிவாக்கிர யோகியினது பாஷ்யத்தைப் படித்தறிந்த விஷயத்தையே ஒப்புக்கொண்டதாக எங்கும் காணப்படவில்லை. இவ்வளவு தூரம் கூறியவற்றிலிருந்து பார்க்கின் தமிழில் தற்காலத்தவர் முழக்கம் சைவசித்தாந்தமெனபது இங்குள்ள சிவப் பிராமணர்களது கொள்கைக்கு !வேறுனதல்லவென்பதும் சிவசித்தாந்த சரபங்கள் சைவப்பிசங்கமென்னும் பேர்கொண்டு சிவப்பிராமண நிந்தை கூறுவதும் முறையல்ல வென்பதும் நன்கு விளங்கும். மேலும் நாளைக்கும் கூட வடமொழியாகமங்களும் பத்தி நூல்களுமில்லாமல் ஒரு சிவாலயமும் தென்னாட்டிலிருக்க முடியாதென்பதும் விசதம். வைதீக கர்மடர்களைக் கண்டிக்கும் உபநிஷத்து ஞானிகளைப்போலவில்லாது ஆகமகர் மடர்களாகிய அமர்த்தக வகுப்பினரைக் கண்டிக்கும் கோலகித்து வாதிகளின் கொள்கையைக் கைக்கொண்ட மெய்கண்டார் மரபினரும் அவரது கொள்கைப் பிரசாரமும் சிவப்பிராமணத்துவேஷமும், வடமொழி வெறுப்புங்காட்டுவதுதான் விசனிக்கத்தக்கது. இது சம்பந்தமாகப் பின்னும் பல விஷயங்கள் எழுதுவதற்குக் கையெழுகின்றதாயினும் விரிவஞ்சி இதனோடு நிறுத்தலானேன், பின்னர் தேவாரவிஷயத்தைப்பற்றியும் சமயம்வாய்ந்த போது எழுதுவேன்.

(தமிழ்நேசன். 16-4-26)

இரவில் மணிபார்க்கும் ரேடியம்.

18 காரட் ரோல்ட் கோல்ட் பொன் டயல்.

8 மூலைக் கெடியாரங்களில் இதுதான் முதற் றரமான கையிற்கட்டும்கெடியாரம் No. 105.

இரவில் மணிபார்ப்பதற்கு இக்கெடிகாரத்திற்கு விளக்கு வெளிச்சம் வேண்டியதில்லை.



இதில் ரேடியம் என்னும் ஓர்வித வஸ்துவை நெம்பர்களிலும் முட்கள்மேலும் சேர்த்திருப்பதால் இரவில் மணி நன்றாய்த்தெரியும். இருட்டு எவ்வளவு கருக்காய் இருக்குமோ அவ்வளவிற்கும் என்கண் குரிய, வெளிச்சத்தைப்போல் பிரகாசிக்கும். இது வெகுகாலம் வரை நன்றாய்ப் போகக் கூடியது. உரத்த சாமான்களால் தயாரிக்கப்பட்டது. இது சரியான டைம் காட்டக்கூடியது. இதை பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். வெகு அழகாயிருக்கும்.

டை 18 காரட் ரோல்ட் கோல்ட் பினேட் இரவில் மணிகாட்டும் கெடியாரம் முன்விலை ரூபா 15-0-0. தற்சமயம் குறைந்தவிலை ரூபா 7-8-0. ரேடியம் இல்லாதது 6-8-0.

No. 110. 5 வருடம் காரண்டியமுள்ள ரோல்ட் கோல்ட் பினேட் பொன் கெடியாரம் விலை ரூபா 10-0-0. ரேடியம் உள்ளது. 11-0-0

விலாசம்: ரேடியோ வாச்கம்பெனி,
போஸ்ட்பாக்ஸ் நம்பர் 142, மதராஸ்.
(Y. 53)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சாக்க
மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா
துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்கலோங்க
நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ
நீதிவிளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambanthan, for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.